<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

முன்னிலை – திரு. எம். விக்னேஷ் பிரபு, எம்.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் நாள் வியாழக்கிழமை

**<u>O.S. No. 438 of 2021</u>**

**(CNR.No.TNTM04-000885-2021)**

1. சேட்டு,
2. கிருஷ்ணவேணி, . . . வாதிகள்

// எதிர் //

1. முனியப்பிள்ளை,
2. அரிகிருஷ்ணன்,
3. கண்ணன்,
4. கஜேந்திரன்,
5. ராஜேஸ்வரி,
6. பழனி,
7. வெங்கிடேசன் (எ) காட்டேரியான்,
8. கஸ்தூரி,
9. கோபி,
10. பிரகாஷ்,
11. பச்சையம்மாள்,
12. சாரங்கன்(எ)வெள்ளை,
13. அமிர்தம்மாள்,
14. இயலரசி,
15. சார்பதிவாளர், பெரணமல்லூர் சார்பதிவகம், பெரணமல்லூர், வந்தவாசி வட்டம்.
16. வட்டாட்சியர், செய்யார் வட்டம், செய்யார்.
17. மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை மாவட்டம். . . . பிரதிவாதிகள்

இவ்வழக்கானது செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்தநிலையில் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி உத்தரவிற்கிணங்க விடுவி.எண்.5664/2024 தேதி 30.10.2024 ன் கீழ் கூடுதல் சார்பு நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:37:52 +0530

06.04.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.இராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5, 14 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.சங்கரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், 6முதல் 13 மற்றும் 15 முதல் 17 பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்புரை

தாவா சொத்தை 15 சமபாகங்களாக பிரித்து அதில் 4/15 பாகத்தை வாதிகளுக்கு சேர்ந்த பாகம் ஒதுக்கி ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், 1 முதல் 5, 8 முதல் 12 பிரதிவாதிகள் பாகம் பிரித்துக்கொள்ள முன்வராதபட்சத்தில் வாதிகளுக்குண்டான மொத்தம் 4/15பாகத்தை வாதிகள் பாகம் அடைந்து தனி சுவாதீனம் அடைய பாகப்பிரிவினைக்கான இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், 25.10.2021 தேதியிட்ட பெரணமல்லூர் சார்பதிவக 1ம் புத்தக ஆவண எண்.2106/2021செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் 05.06.2020 தேதியிட்ட பெரணமல்லூர் சார்பதிவக 1ம் புத்தக ஆவண எண்.581/2020 செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்யும்படிக்கும், தாவா சொத்து குறித்து முடிவாக பாகப்பிரிவினை முடியும் வரையில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தை எவ்வித பராதீனமும் செய்யக்கூடாது என ஒரு நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்க கோரியும், தாவா செலவுத்தொகைக்காகவும் தாவா தாக்கல்.

## 2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்

2ம் வாத 1ம் வாதியின் மனைவி என்றும், 1ம் பிரதிவாதி வாதியின் உடன்பிறந்த மூத்த சகோதரர் என்றும், 2, 3, 4 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் குமாரர்கள் என்றும், 5ம் பிரதிவாதி, காலம்சென்ற 1ம் பிரதிவாதியின் குமாரரான ராஜேந்திரனின் குமாரத்தி 13ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் மனைவி என்றும், 12ம் பிரதிவாதி 1ம் வாதி மற்றும் 1ம்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:38:00 +0530

பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரி 6, 7 பிரதிவாதிகள் 2ம் வாதியின் சகோதரர்கள் 9, 11பிரதிவாதிகள் 1ம் வாதியின் காலம்சென்ற சகோதரர் மாயப் பிள்ளையின் குமாரர்கள் என்றும், 8, 10 பிரதிவாதிகள் மாயப் பிள்ளையின் குமாரத்திகள் என்றும், பலகண்டபுத்தூர் கிராமத்தில் வசித்த நன்னிப்பிள்ளை என்பவருக்கு நாராயணபிள்ளை, முனுசாமி பிள்ளை, அர்ஜுன பிள்ளை மற்றும் கிஷ்டப்பிள்ளை என நான்கு குமாரர்கள் என்றும், இவர்கள் ஆடுகள் மேய்த்தும், சிறிய பரப்பில் விவசாயம் செய்தும் குடும்பம் நடத்தி வந்தனர் என்றும், நாராயண பிள்ளை, முனுசாமி பிள்ளை மற்றும் அர்ஜுனபிள்ளை இவர்களின் மனைவிகள் முறையே செல்லம்மாள், கண்ணம்மாள், சின்னம்மாள் ஆகிய மூவரும் சேர்ந்து தனியாக ஆடுகள் மேய்த்தும், கறவை மாடுகள் மூலமும் தனியாக சம்பாதித்து கூட்டாக தாவா சொததான ச.எண்.411/2ல் 47 செண்ட், 411/3ல் 40 செண்ட் மற்றும் வேறு ஒரு 30 செண்ட் சொத்தை தனிப்பட்ட முறையில் 27.11.1956 தேதியில் ஆவண எண்.2500/1956 படி சையத் தஸ்தகீர் சாயபு என்பவரிடம் கிரையம் பெற்று தனியாக அனுபவித்து வந்தனர் என்றும், இக்கிரையத்தை உறுதிபடுத்த சையத் பாஷா சாயபு என்பவர் 06.05.1958 தேதியில் ஆவண எண்.2008/1958 படி செல்லம்மாள் வகையறாவுக்கு பாக பாத்திய அக்குவிடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், 1ம் வாதியின் தாயார் கண்ணம்மாள், ராஜகோபால் கவுண்டரிடம் 11.09.1959 தேதியில் ஆவண எண்.2167/1959 படி தாவா சொத்து அயிட்டம்-1 ல் 13 செண்ட் வீட்டு மனையை கிரயம் பெற்றார் என்றும், மேலும் 01-11-1963 தேதியில் ஆவண எண்.2012/1963 படி தாவா சொத்து அயிட்டம் -1ல் 20 செண்ட் வீட்டு மனையை கிரயம் பெற்றார் என்றும், 1ம் வாதியின் தகப்பனார் தாவா சொத்து அயிட்டம்-3 ச.எண்.411/1 ல் 59 செண்டில் 1/3 பங்கான 19 1/3

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:38:04 +0530

செண்டையும் 4ம் அயிட்ட ச.எண்.411/2 ல் 47 செண்டில் 15 1/3 செண்டையும், 5ம் அயிட்ட ச.எண்.411/3 ல் 40 செண்டில் 13 1/3 செண்டையும், இதர 10 செண்டையும் 07–02–1974 தேதியில் ஆவண எண்.309/1974 படி கிரயம் பெற்றார் என்றும், மேலும் 1ம் வாதியின் தகப்பனார் தாவா 4,5 அயிட்ட சொத்துக்களில் 1/3 பாகத்தையும் இதர சொத்தையும் அவரது சகோதரர் அர்ஜுன பிள்ளை இவரது மனைவி சின்னகண்ணு அம்மாள் இவர்களிடம் 16–10–1972 தேதியில் ஆவண எண்.2100/1972 படி கிரயம் பெற்றார் என்றும், தாவா 2ம் அயிட்ட 8 செண்ட் வீட்டு மனையை 1ம் வாதியின் தகப்பனார் முனுசாமிபிள்ளை 01–11–1967 ல் ஆவண எண்.6/1967 படி அப்துல் அஜீஸ் சாயபுவிடம் கிரயம் பெற்றார் என்றும், நாராயண பிள்ளை, முனுசாமி பிள்ளை. அர்ஜுன பிள்ளை மற்றும் கிஷ்டப்பிள்ளை இவர்கள் நால்வரும் கூட்டு குடும்பமாக வசித்து வந்து சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் தங்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்துகொண்டனர் என்றும், 1ம் பிரதிவாதி, 1ம் வாதி மற்றும் மாயப் பிள்ளை ஆகிய மூவரும். மேற்படி முனுசாமி பிள்ளையின் குமாரர்கள் என்றும், நவநீதம்மாளும், 13ம் அமிர்தம்மாள் ஆகிய இருவரும் முனுசாமி பிள்ளையின் குமாரத்திகள் என்றும், முனுசாமி பிள்ளையும் அவரது மூன்று குமாரர்களுமான 1ம் பிரதிவாதி, 1ம் வாதி, காலம் சென்ற மாயப்பிள்ளை ஆகியவர்கள் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் தங்கள் பூர்வீக மற்றும் தகப்பனார் மற்றும் தாயார் சம்பாதித்த சொத்துக்களில் இந்த தாவா சொத்துக்களை தவிர்த்து இதர சொத்துக்களை வாய் மொழியாக பாகம் பிரித்துக்கொண்டனர் என்றும், இக்குடும்ப பாக ஏற்பாடுக்கு சகோதரிகளான நவநீதம்மாளும், 13ம் பிரதிவாதியும் சம்மதம் தெரிவித்தனர் என்றும், தாவா சொத்துக்களில் 1, 2 அயிட்ட சொத்துக்கள் வீட்டு மனையாகும் என்றும், 3,4,5

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:38:14 +0530

அயிட்ட சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றும், 1ம் வாதி, 1, & 13 பிரதிவாதிகளின், தகப்பனார் முனுசாமி பிள்ளை 1995 ம் வருடம் இன்டெஸ்ட்டேட்டாக காலமாகிவிட்டார் என்றும், தாயார் கண்ணம்மாள் 2001ம் வருடம் இன்டெஸ்ட்டேட்டாக காலமாகிவிட்டார் என்றும், பின்னர் 1ம்பிரதிவாதி, குடும்பத்தில் முத்தவர் என்பதாலும் இந்து கூட்டுக்குடும்பத்தின் குடும்ப தலைவர் என்பதாலும் தாவா சொத்துக்கு பட்டா எண் 702 படி ல் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றும், தாவா சொத்துக்களை இரு சகோதரிகள் உட்பட 5 நபர்களும் பின்னிட்டு பாகம் பிரித்துக்கொள்ளாமல் பொதுவாகவே அனுபவித்து வரப்படுகிறது பாகப்பிரிவினை செய்துகொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டு இது நாள் வரையிலும் பாகம் பிரிததுக்கொள்ளாமல் பொதுவாகவே அனுபவித்து வரப்படுகிறது என்றும், மூத்த சகோதரர் என்பதால் 1ம்பிரதிவாதி பெயரில் பொதுகுடும்பத்துக்காக பட்டா எண்.702 என பட்டா உள்ளது என்றும், பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் இருந்தாலும் தாவா சொத்துகள் மட்டும் அனைவராலும் பொதுவாகவே கூட்டாக அனுபவித்து வரப்படுகிறது என்றும், மூத்த சகோதரி நவநீதம்மாள் 2009 ம் வருடம் இன்டெஸ்ட்டேட்டாக காலமாகிவிட்டார் என்றும், தாவா சொத்துக்களில் நவநீதம்மாளின் 1/5 பாக உரிமையை அவரது வாரிசுகளான அவரது குமாரர்களான 6, 7 பிரதிவாதிகள், குமாரத்தியான 2ம் வாதி ஆகிய மூவருக்கும் சேர்ந்து 1/5 பாகம் அடைய பாத்தியப்பட்டவர்கள் என்றும், 1ம் பிரதிவாதி 1/5 பாகம் அடைய பாத்தியப்பட்டவர் என்றும், மாயப்பிள்ளை 2012ம் வருடம் இன்டெஸ்ட்டேட்டாக காலமாகிவிட்டார் என்றும், அவரது 1/5 பாக உரிமையை அவரது வாரிசுகளான 8, 9, 10, 11, 12 பிரதிவாதிகள் சேர்ந்து 1/5 பாகம் அடைய பாத்தியப்பட்டவர்கள் என்றும், சகோதரி அமிர்தம்மாளுக்கு, தாவா சொத்துகளில் தலா 1/5 பாக உரிமை உள்ளது என்றும், நவநீதம்மாளின்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:38:20 +0530

1/5 பாகத்தில் அவரது குமாரத்தியான 2ம் வாதிக்கு 1/15 பாக உரிமை உள்ளது என்றும், வாதிகள் இருவருக்கும் சேர்ந்து தாவா சொத்துகளில் அவர்களுக்குண்டான 3/15 + 1/15 = 4/15 பாகம் பிரித்து அடைய இந்த தாவாவை கனம் நீதிமன்றத்தில் தொடருகிறார்கள் என்றும், தாவா சொத்தான பொது குடும்ப சொத்துக்கு பாகப்பிரிவினை ஏற்படாத நிலையில் 1ம் பிரதிவாதி, அவர் பெயரில் பட்டா இருந்ததை சாதகமாக்கிக்கொண்டு முறைகேடாகவும், சட்டவிரோதமாகவும் தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பிரித்து அவரது குமாரர்களான 2, 3, 4 பிரதிவாதிகள் பெயர்களிலும், காலம்சென்ற அவரது மூத்த மகனான ராஜேந்திரனின் மகளான 5ம் பிரதிவாதி பெயரிலும் 25.10.2021 தேதியில் ஆவண எண்.2106/2021 படி ஒரு செட்டில்மெண்ட ஆவணம் எழுதி பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து அறிந்து 1ம் பிரதிவாதியை அணுகி, 1ம் வாதி ஆட்சேபனைசெய்து செட்டில்மெண்டை ரத்து செய்யுமாறும் பாகப் பிரிவினைக்கு முன்வருமாறு கோரியபோது அதற்கு 1ம் பிரதிவாதி மறுத்து தகறாரு செய்தார் என்றும், பாகப்பிரிவினை ஏற்படாத நிலையில் வாதிகளையும் இதர பாக உரிமையாளர்களை ஏமாற்றி மோசடியாக 1ம் பிரதிவாதி, தாவா 1,2 அயிட்ட சொத்துக்களை அவர் விருப்பம் போல் பிரித்து ஐக்பந்தி எழுதி மோசவிதமாகவும் சட்டவிரோதமாகவும் 2, 3, 4, 5 பிரதிவாதிகள் பெயர்களில் ஏற்படுத்திய மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி பாகஸ்தர்களையும் கட்டுப்படுத்தாது என்றும், இந்த செட்டில்மெண்ட் ஆச்சாரத்திற்கும் வரவில்லை என்றும், மேற்படி மோசடியான செட்டில்மெண்ட் ஆவணத்தை முன்னிருத்தி தாவா சொத்தை பிரித்து 2, 3, 4, 5 பிரதிவாதிகள் தங்கள் பெயருக்கு உட்பிரிவு செய்து தனிப்பட்டா பெற 15 ம் பிரதிவாதியான செய்யார் வட்டாட்சியரிடம் மனு

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:38:26 +0530

செய்துள்ளதாக 1ம் வாதிக்கு தெரிய வந்தது என்றும், அவ்வாறு 2, 3, 4, 5 பிரதிவாதிகள் தனித்தனியாக உட்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்துகொள்ள சட்டப்படி அவர்களுக்கு உரிமை இல்லை என்றும், தாவா சொத்தில் பாகப்பிரிவினை ஏற்படாத நிலையில் 1ம் பிரதிவாதி மோசவிதமாகவும் சட்டவிரோதமாகவும் 2, 3, 4, 5 பிரதிவாதிகள் பெயர்களில் 25.10.2021ல் செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளதால் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து தரம், மதிப்பு, அனுபவ வசதி உத்தேசித்து 5 சம பாகமாக பாகப்பிரிவினை செய்ய 1ம் பிரதிவாதி முன்வரவேண்டியது எனக்கோரியும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பட்டா மாற்றம் செய்யக்கூடாது என வலியுறுத்து 16ம் பிரதிவாதிக்கும் 1ம் வாதி அவரது வழக்கறிஞர் மூலம் 30.10.2021 தேதியில் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், இந்த அறிவிப்புக்கு 1ம் பிரதிவாதி பொய்யான, தவறான சங்கதிகளை தெரிவித்து அவரது வழக்கறிஞர் மூலம் 12.11.2021 தேதியில் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றும், தாவா சொத்துக்கள் குறித்து ஏற்கனவே பாகம் ஏற்பட்டுவிட்டதாகவும் தாவா 1, 2 அயிட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு வாய்மொழி பாசுப்பிரிவினையில் பாகம் சென்று அவர் தனிப்பட்ட முறையில் அனுபவித்துவருவதாகவும் அதானால்தான் பட்டா அவர் பெயரில் இருந்து வருவதாகவும் பதில் அறிவிப்பில் தெரிவித்த சங்கதிகள் முற்றிலும் பொய்யானவை என்றும், 1ம் பிரதிவாதிக்கு பாகம் சென்ற ச.எண்382/1 ல் 2.00 ஏக்கரில் 67 செண்ட் நிலத்தை 1ம் பிரதிவாதி, வாதியிடம் ரூ 40000/- பெற்றுக்கொண்டு 1ம் வாதிக்கு கொடுத்துவிட்டார் என்றும், அதற்காக 09-03-2009 தேதியில் 1ம் வாதிக்கு ஒரு விடுதலைப்பத்திரம் எழுதிகொடுத்தார் என்றும், பதில் அறிவிப்பில் குறிப்பிடுள்ளதுபோல் 67 செண்ட் நிலத்துக்கு பதிலாக தாவா சொத்து 7

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:38:30 +0530

செண்ட் வீட்டு மனையை 1ம் பிரதிவாதி அடைந்தார் என்ற பதில் அறிவிப்பு சங்கதி முற்றிலும் பொய்யானது என்றும், வீட்டு மனையில் பாகப்பிரிவினையே நடக்கவில்லை என்றும், எனவே 37 செண்ட் வீட்டு மனை 1ம் பிரதிவாதிக்கு உரிமையானது என்ற பதில் அறிவிப்பில் தெரிவித்த சங்கதி பொய்யானது என்றும், தாவா சொத்துக்கள் பொருத்தமட்டில் பாகம் ஏற்படவில்லை என்றும், அனைவராலும் பொதுவாகவே கூட்டாக அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றும், சகோதரிகளான நவநீதம்மாளுக்கும், 13ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்துக்களில் தலா 1/5 பாக உரிமை உள்ளது என்றும், வாதிகளையும் பிற பாக உரிமையாளர்களையும் ஏமாற்றி சொத்தை அபகரிக்க 1 முதல் 5 பிரதிவாதிகள் திட்டமிட்டு மோசவிதமாக மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றும், 3, 4, 5 அயிட்ட தாவா சொத்தையும் அபகரிக்க, 1ம் பிரதிவாதி அவரது மருமகளான 14ம் பிரதிவாதி இயலரசி பெயருக்கு 05.06.2020 தேதியில் ஆவண எண்.581/2020 படி ரூ.500000/- அடமான கடன் பெற்றதாக ஜோடித்து 3, 4, 5 அயிட்ட தாவா சொத்து குறித்து ஒரு அடமான ஆவணம் எழுதி பதிவு செய்துள்ளார் என்றும், இச்சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பொதுவில் 1/5 பாக உரிமை மட்டுமே உள்ளது என்றும், 3,4,5 அயிட்ட தாவா சொத்து முழுவதையும் அடமானம் செய்ய 1ம் பிரதிவாதிக்கு உரிமை எதுவும் இல்லை என்றும், இவ்வாறு ஒரு அடமானப்பத்திரம் ஏற்படுத்தினால் சொத்து தங்களுக்கு உரிமையாகிவிடும் என்ற தப்பான நப்பாசையில் மேற்படி நாமகார்த்தமான் அடமானப்பத்திரத்தை 1ம் பிரதிவாதியின் குடும்பம் உருவாக்கியுள்ளது என்றும், மேற்படி அடமான ஆவணம் சட்டப்படி செல்லாது வாதிகளையும் இதர பாகஸ்தர்களையும் கட்டுப்படுத்தாது என்றும், இந்த அடமான ஆவணத்தையும் 1ம் பிரதிவாதியும் 14ம் பிரதிவாதியும் சேர்ந்து

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:38:38 +0530

ரத்து செய்யக் கடமைப்பட்டவர்கள் என்றும், அடமான ஆவணத்தையும் 1ம் பிரதிவாதியும் 14ம் பிரதிவாதியும் சேர்ந்து ரத்துசெய்யக் கடமைபட்டவர்கள் என்றும், 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினை செய்ய மறுத்து தாவா சொத்துகளில் தனிப்பட்ட உரிமை கொண்டாடுவதாலும், அவரது குமாரர்கள், பேத்தி பெயர்களில் தாவா 1,2 அயிட்ட சொத்துக்கள் குறித்து மோசவிதமாக செட்டில்மெண்ட ஆவணம் ஏற்படுத்தியிருப்பதாலும் தாவா 3, 4, 5 அயிட்ட தாவா சொத்துக்கள் குறித்து நாமகார்த்தமாக தனது மருமகள் பெயருக்கு அடமானப்பத்திரம் ஏற்படுத்தியிருப்பதாலும் இந்த மோசடி பத்திரங்களை ரத்து செய்ய மறுப்பதாலும் வாதிகள் இருவருக்கும் சேர்ந்து தாவா சொத்துகளில் அவர்களுக்குண்டான மொத்தம் 4/15 பாகத்தை பிரித்து பாகம் அடையவும், மேற்படி செட்டில்மெண்ட் மற்றும் அடமான ஆவணங்கள் செல்லாது விளம்புகை செய்யகோரியும் இந்த தாவாவை சுனம் நீதிமன்றத்தில் தொடருகிறார்கள் என்றும், தாவா சொத்து குறித்து 1ம் பிரதிவாதி தனது குடும்ப நபர்கள் பெயரில் ஏற்படுத்திய செட்டில்மெண்ட் அடமானம் ஆவணங்கள் செல்லாது என விளம்புகை செய்ய பரிகாரம் கோருவதால் 15ம் பிரதிவாதியான சார்பதிவாளரும், மோசடியான செட்டில்மெண்ட் ஆவணத்தை முன்னிருத்தி 2,3,4,5 பிரதிவாதிகள் வருவாய் துறையில் பட்டா பெயர் மாற்றம் செய்ய முயற்ச்சிப்பதால் 16ம் பிரதிவாதியான வட்டாட்சியரும் இத்தாவாவில் தரப்பினராக சேரகப்பட்டுள்ளார்கள் என்றும், அரசு அலுவலர்களான 15, 16, 17 பிரதிவாதிகள் பேரில் இத்தாவாவில் பரிகாரங்கள் கோரவில்லை என்றும், 16ம் பிரதிவாதிக்கு 30.10.2021 ல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும், அரசு அலுவலர்களான 15,16,17 பிரதிவாதிகளுக்கு தாவா தாக்கல் செய்வதற்கு 60 நாட்களுக்கு முன்னர் அறிவிப்பு அனுப்புவதிலிருந்து விலக்கு அளிக்க கோரி 80 சிபிசி படிக்கு வாதிகள் இடைநிலை மனுவை கனம் நீதிமன்றத்தில்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:38:43 +0530

தாக்கல் செய்துள்ளனர் என்றும், வாதிகள் பிரதிவாதிகள் கூட்டுக்குடும்பத்துக்கு எவ்வித பொது கடனும் இல்லை என்றும், தாவா சொத்து எவ்வித அறக்கட்டளைக்கும் சம்மந்தப்பட்டதல்லல என்றும், தாவா சொத்து பேரில் ஜீவனாம்ச பற்று எதுவும் இல்லை என்றும், தாவா சொத்தை 15 சமபாகங்களாக பிரித்து அதில் 4/15 பாகத்தை வாதிகளுக்கு சேர்ந்த பாகம் ஒதுக்கி ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், 1 முதல் 5, 8 முதல் 12 பிரதிவாதிகள் பாகம் பிரித்துக்கொள்ள முன்வராதபட்சத்தில் வாதிகளுக்குண்டான மொத்தம் 4/15பாகத்தை வாதிகள் பாகம் அடைந்து தனி சுவாதீனம் அடைய பாகப்பிரிவினைக்கான இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், 25.10.2021 தேதியிட்ட பெரணமல்லூர் சார்பதிவக 1ம் புத்தக ஆவண எண்.2106/2021செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் 05.06.2020 தேதியிட்ட பெரணமல்லூர் சார்பதிவக 1ம் புத்தக ஆவண எண்.581/2020 செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்யும்படிக்கும், தாவா சொத்து குறித்து முடிவாக பாகப்பிரிவினை முடியும் வரையில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தை எவ்வித பராதீனமும் செய்யக்கூடாது என ஒரு நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்க கோரியும், தாவா செலவுத்தொகைக்காகவும் தாவா தாக்கல்.

**3. <u>1ம் பிரதிவாதி பரம் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 5 மற்றும் 14ம் பிரதிவாதி பரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவில் கண்டுள்ள சங்கதிகளில் இப்பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மேற்படி சொத்து நாராயண பிள்ளை மனைவி செல்லம்மாள் பெயரிலும், முனுசாமி பிள்ளையின் மனைவி

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:38:52 +0530

கண்ணம்மாள் பெயரிலும், அர்ஜின பிள்ளையின் மனைவி சின்னகணணம்மாள் பெயரில் கிரையம் பெறப்பட்டதே தவிர மேற்படி கிரையத்திற்காக எந்தவித தொகையும் கொடுக்கவில்லை என்றும், மேற்படி சொத்துக்கள் பெயரளவில் மட்டுமே கிரையம் பெறப்பட்டதே தவிர உண்மையில் மேற்படி சொத்துக்கள் இப்பிரதிவாதியின் பெயரிலும், இப்பிரதிவாதியின் தகப்பனாரான முனுசாமிபிள்ளை பெயரிலும் சேர்ந்து கிரையம் பெற்ற சொத்துக்கள் ஆகும் என்றும், இந்த விவரமும் 1ம் வாதிக்கு நன்கு தெரியும் என்றும், ஆனால் வேண்டுமென்றே உண்மையை மறைத்து பொய்யுரைத்து தங்களுடைய சொந்த உழைப்பை கொண்டும், வருவாயை கொண்டும், கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று பொய்யுரைத்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதனால் இந்த தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றும், தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், 1ம் வாதியின் தாயார் கண்ணம்மாள் ராஜகோபால் கவுண்டரிடம் 11.09.1959 தேதியில் தாவா 1வது அயிட்ட சொத்தில் 13 செண்ட் வீட்டுமனையை கிரையம் பெற்றார் என்றும், 01.11.1963 அன்று தாவா 1வது அயிட்ட சொத்தில் 20 செண்ட் வீட்டு மனையை கிரையம் பெற்றார் என்றும், 1ம் வாதியின் தகப்பனார் தாவா 3வது அயிட்ட சர்வே எண்.411/1–ல் 59 செண்ட்டில் 1/3 பங்கான 19 1/3 செண்ட் நிலத்தையும் தாவா 4வது அயிட்ட சொத்தான சர்வே எண்.411/2–ல் 47 செண்ட் நிலத்தில் 15 1/3 செண்ட் நிலத்தையும், தாவா 5வது அயிட்ட சொத்தான சர்வே எண்.411/3–ல் 40 செண்ட்டில் 13 1/3 செண்ட் நிலத்தையும் இதர 10 செண்ட்டையும் 07.02.1974 அன்று கிரையம் பெற்றதாகவும் தாவாவில் கண்டுள்ளதை இப்பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார் என்றும், தாவா சொத்திற்கும், வாதிகளுக்கும், எந்தவித பாத்யதையும் உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தினை வாதிகள்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:39:00 +0530

அனுபவித்ததும் இல்லை என்றும், தாவா சொத்தினை வாதிகள் அனுபவித்தும் இல்லை என்றும், 1ம் வாதிக்கும், இப்பிரதிவாதிக்கும் இப்பிரதிவாதியின் சகோதரரான மாய பிள்ளைக்கும், அவர்களின் தகப்பனாரான முனுசாமி பிள்ளைக்கும் தாயாரான கண்ணம்மாளும், உயிருடன் இருக்கும் பொழுதே பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டனர் என்றும், மேற்படி இருவரும் ஏக குடும்ப சொத்துக்கள் குறித்தும், முனுசாமி பிள்ளை தன்னுடைய பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் குறித்தும் கண்ணம்மாள் தன்னுடைய பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் குறித்தும் 3 சரிசம பாகங்களாக பிரித்து அவரவர்களுக்கு பாகமாக வந்த சொத்தினை அவரவர்களின் சுவாதீனத்தில் ஒப்படைத்துவிட்டனர் என்றும், அதன் அடிப்படையில் 1ம் வாதிக்கு பாகமாக வந்த சொத்துக்கள் 1ம் வாதியும், இப்பிரதிவாதிக்கு பாகமாக வந்த சொத்தினை மாயப்பிள்ளையும், அடைந்து அனுபவித்து வந்தனர் என்றும், மேற்படி பாகப்பிரிவினை குறித்து எழுத்து மூலமாக பாகப்பிரிவினை ஏற்படவில்லையே தவிர வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டு கடந்த 35 ஆண்டுகளாக அவரவர்களுக்கு பாகமாக வந்த சொத்தினை அவரவர் அடைந்து அனுபவித்து வந்தனர் என்றும், அதில் அவர்களுக்குள் எந்தவித பிரச்சனையும் இருந்தது இல்லை என்றும், பலகண்ட புத்தூர் கிராமத்தில் கிராம காலனி ஓரமாக 2 ஏக்கர் 60 செண்ட் புஞ்சை நிலம் ஏக குடும்பத்திற்கு பாத்தியதையாக இருந்தது என்றும், மேற்படி நிலத்தினை ஒட்டியவாறு நத்தத்தில 40 செண்ட் நிலம் இருந்தது என்றும், மேற்படி 2.60 ஏக்கர் நிலத்தில் 60 செண்ட் நிலம் 1ம் வாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும், மீதமிருந்த 2 ஏக்கர் நிலத்தில் மூவருக்கும் சரிசமமாக பிரித்துக் கொடுக்கப்பட்டது என்றும், மேலும் முஸ்லீம் சமுதாயத்தினர் வசித்து வரும்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:39:11 +0530

பகுதியை ஒட்டியவாறு 30 செண்ட் நிலமும், அதில் உள்ள கிணறு பம்பு செட்டில் 2/3 பங்கும் 1ம் வாதிக்குபாகமாக ஒதுக்கப்பட்டது என்றும், மேற்படி நிலங்கள் அல்லாமல் கழனிகாட்டில் 55 செண்ட் நிலமும், பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும், 1ம் வாதியின் சுவாதீனத்தில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்றும், 1ம் வாதியும் மேற்படி நிலங்களை முழுஉரிமையுடன் அனுபவித்து வருகின்றனர் என்றும், இப்பிரதிவாதியின் சகோதரரான மாயபிள்ளைக்கு கழனிக்காட்டில் 60 செண்ட் நிலமும் அதில் உள்ள கிணறு பம்பு செட்டும், நஞ்சையில் 20 செண்ட் நிலமும்,30 செண்ட் நிலமும், 44 செண்ட் நிலமும், புஞ்சையில்ல 70 செண்ட் நிலமும், பள்ளத்தெருவில் இருந்த மெத்தை வீடு மற்றும் காலனி ஓரம் 2 ஏக்கரில் 1/3 பாகமும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும், அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தினை அவர் அடைந்து அனுபவித்து வந்து அவர் இறந்தபிறகு அவருடைய வாரிசுகள் அதனை அடைந்து அனுபவித்து வருகின்றனர் என்றும், இப்பிரதிவாதிக்கு ஊர் ஓரமாக காலனிக்கு போகும் ரோட்டினை ஒட்டியவாறு நஞ்சையில் 1 ஏக்கர் 70 சென்ட் நிலமும் அதில் உள்ள கிணறு பம்பு செட்டு, வீட்டு மனை 37 செண்ட்டில் 30 செண்ட் நிலமும் காலலனி ஓரம் 2 ஏக்கர் நிலத்தில் 1/3 பங்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி வீட்டு மனை 37 செண்ட்டில் இப்பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட 30 செண்ட் நிலம் போக மீதமுள்ள 7 செண்ட் நிலத்தை 1ம் வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றும், மேற்படி பாகப்பிரிவினை ஏற்படும் போது இப்பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களும், தாயார் பெயரில் கிரயம் பெறப்பட்ட சொத்துக்களும் சேர்த்து தான் அவர்கள் முன்னிலையில் அவர்களின் முழுசம்மதத்தின் பேரிலேயே பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றும், இந்த விவரமும் 1ம் வாதிக்கு நன்கு தெரியும்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:39:19 +0530

என்றும், ஆனால் தற்போது தாவா சொத்துக்களை தவிர்த்து ஏனைய சொத்துக்கள் குறித்து பாகம் ஏற்பட்டதாக கண்டு இத்தாவா தாக்கல் என்றும், மசூதி மாண்யம் 3 ஏக்கர் 22 செண்ட் நிலம் இப்பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றும், மேற்படி சொத்தும் ஏக குடும்பத்தில் இப்பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டதால் பாகப்பிரிவினை ஏற்படுத்தும் போது மேற்படி சொத்தை மூவரும் சரிசமாக அடைந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது என்றும், அதன்படிக்கு மூவரும் மேற்படி சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்தனர் என்றும், அவ்வாறு அனுபவித்து வரும் பட்சத்தில் அவரவர்களின் வசதி காரணமாக இப்பிரதிவாதி தனக்கு காலனி ஓரமாக பாகமாக ஒதுக்கிய 2 ஏக்கரில் இப்பிரதிவாதி 1ம் வாதிக்கு கொடுத்து விடுவது என்றும், அதற்கு பதிலாக இப்பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்ட மசூதி மாண்ய நிலத்தை அவருக்கு பாகமாக கொடுத்த வீட்டு மனையில் 7 செண்ட் நிலத்தை 1ம் வாதி இப்பிரதிவாதி கொடுப்பது என்றும், முடிவு செய்து இப்பிரதிவாதி அவருக்கு பாகமாக வந்த மேற்படி சொத்தில் 1ம் வாதிக்கு பாகமாக வந்த சொத்தை இப்பிரதிவாதிக்கு கொடுத்து அதன்படிக்கு இருவரும் அனுபவித்து வந்தனர் என்றும், இப்பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி இப்பிரதிவாதிக்கு பாகமாக வந்த மேற்படி சொத்து குறித்து 1ம் வாதிக்கு ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றும், அதற்கு பதிலாக மசூதி மாண்யம் நிலத்தில் 1/3 பங்கில் இப்பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்திருக்க வேண்டும் என்றும், நத்தத்தில் 7 செண்ட் நிலத்தை இப்பிரதிவாதிக்கு 1ம் வாதி எழுதிக் கொடுத்திருக்கவேண்டும் என்றும், ஆனல் மசூதி மாண்ய நிலம ஏற்கனவே இப்பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டிருந்தாலும், இப்பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டிருந்ததாலும், இப்பிரதிவாதி பெயரில் பட்டா இருந்ததாலும், அதே

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:39:25 +0530

சொத்து குறித்து ஆவணம் ஏற்படுத்த முடியாது என்பதால் மேற்படி சொத்து குறித்து ஆவணம் எதுவும் 1ம் வாதியும் எழுதவில்லை என்றும், மேலும் 7 செண்ட் நிலமும் ஏற்கனவே இப்பிரதிவாதி பெயரில் பட்டா இருந்ததால் அது குறித்து ஆவணம் ஏற்படவே இல்லை என்பதால் 1ம் வாதியிடம் இப்பிரதிவாதி எந்தவித ஆவணமும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றும், ஆக குடும்ப சொத்துக்கள் குறித்து ஏற்கனவே மேற்கண்ட வகையில் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டு அவருக்கு பாகமாக வந்த சொத்தக்களை அவரவர் அடைந்து வரும் பட்சத்தில் தாவா சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினையே ஏற்படவில்லை என்று வாதிகள் இந்த தாவாவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும், தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும், வாதி கடந்த 30.10.2021 வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு கொடுத்தார் என்றும், அந்த அறிவிப்பிற்கு இப்பிரதிவாதி 12.12.2021 அன்றுஒரு விளக்கமான பதில் அறிவிப்பினை கொடுத்திருந்தார் என்றும், அந்த பதில் அறிவிப்பிலேயே கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்னரே அறிவிப்பில் கண்டுள்ள சொத்துக்கள் குறித்தும் பாகம் ஏற்பட்டுவிட்டது என்றும், யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும், தெளிவாக குறிப்பிட்டு இருந்தார் என்றும், அந்த பாகபிரிவினை அடிப்படையில் அவருக்கு பாகமாக வந்த சொத்திற்கான பட்டா மாற்றம் செய்யப்பட்டிருந்தது என்றும் குறிப்பிட்டிருந்தது என்றும், மேலும் வீட்டு மனையில் இப்பிரதிவாதிக்கு பாகமாக வந்த 30செண்ட் நிலத்தில் 1ம் வாதியிடமிருந்து பெற்ற 7 செண்ட் நிலத்தையும் தன்னுடைய குமாரர்களான 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயருக்கு தனித்தனியாக தானசெட்டில்மெண்ட் மூலம் தன்னுடைய மூத்த குமாரரான காலம் சென்ற இராஜேந்திரன் மகள் இராஜேந்திரன் மகள் 5ம் பிரதிவாதி பெயருக்கு தானம் எழுதி அவருடைய



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:39:31 +0530

சுவாதீனத்திலும் ஒப்படைத்துவிட்டார் என்றும், அவர்களும் அவரவர்களுக்கு கொடுத்த சொத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்துகொண்டு அனுபவித்து வருகின்றனர் என்றும், மேற்படிவீட்டு மனையில் மேலாண்டை பக்கத்தில் 5 செண்ட் நிலத்தை 5ம் பிரதிவாதிக்கும் அதற்கும் கிழக்கே 5செண்ட் நிலத்தை 2ம் பிரதிவாதிக்கும் அதற்கும் கிழக்கே 10 செண்ட் நிலத்தை 3ம் பிரதிவாதிக்கும், அதற்கும் கிழக்கே 17 செண்ட் நிலத்தை 4ம் பிரதிவாதிக்கும் தனித்தனியாக எழுதி அவரவர்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து அவர்களுடைய சுவாதீனத்தில் ஒப்படைத்துவிட்டார் என்றும், இந்த விவரமும் வாதிக்கு நன்கு தெரியும் என்றும், ஆனால் மேற்படி அனைத்து உண்மைகளையும் மறைத்து பொய்யுரைத்து இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இப்பிரதிவாதி தனக்கு பாகமாக வந்த சொத்து குறித்து செய்யாறு நிலவள வங்கியில் அடமானம் செய்து கடன் உதவி பெற்று அந்த கடனையும் பைசல் செய்துவிட்டார் என்றும், அதனால் குடும்ப சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று இந்த தாவாவை தாக்கல் செய்யப்பட்டிருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அதனால் இந்த தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், தாவா சொத்து குறித்து இப்பிரதிவாதியோ அல்லது 2 முதல் 5 பிரதிவாதிகளோ எந்தவித பராதீனமும் செய்யும் எண்ணத்தில் இல்லை என்றும்,அதனால் தாவா சொத்துக்கள் குறித்து இப்பிரதிவாதியோ அவருடைய ஆட்களோ பராதீனம் செய்யாமல் இருக்க நிரந்தர தடையுத்தரவு வழங்க கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனுவும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், அதனால் வாதியின் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், வாதியின் தாவாவில் கண்டுள்ளஅனைத்து சங்கதிகளும் உண்மைக்கு

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:39:39 +0530

புறம்பான சங்கதிகள் என்றும், 1ம் வாதி ஒரு பொறுப்பான காவல் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர் என்றும், தற்போது ஓய்வு பெற்றுவிட்டதால் 1ம் வாதி வேண்டுமென்றே ஏற்கனவே சுமூகமாக இருந்து வரும் பட்சத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி அதன் மூலம் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று செய்து வருகின்றார் என்றும், அதனால் இந்த தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றும், தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், வாதி தாக்கல் செய்துள்ள வியாஜ்ஜியமூலம் உண்மையானது அல்ல என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவை இப்பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி பிரதிவாதிகள் பரம் எதிர்வழக்குரை தாக்கல்.

4. வாதிகளின் வழக்குரை, 1 முதல் 5 மற்றும் 14 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை பரிசீலிக்கப்பட்டு பின்வரும் வழக்கெழு வினாக்கள் 10.07.2023 தேதியன்று வனையப்பட்டுள்ளன.

1. வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு பாக உரிமை உள்ளதா ?
2. வழக்கில் கோரியுள்ள 4/15 பாகம் வாதிகளுக்கு அளிக்கதக்கதா ?
3. பெரணமல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 2106/2021, நாள் : 25.10.2022 ஆவணத்தை பொறுத்து கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு அளிக்கதக்கதா ?
4. பெரணமல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 581/2020, நாள் : 05.06.2020 ஆவணத்தை பொறுத்து கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு அளிக்கதக்கதா ?
5. வழக்கில் கோரியுள்ள நிரந்தர தடையுத்தரவு கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு அளிக்கதக்கதா ?
6. வேறு என்ன பரிகாரம் வாதிகளுக்கு அளிக்கதக்கது ?

5. வாதிகள் தரப்பில் 1–ம் வாதி திரு. சேட்டு வா.சா.1 ஆகவும், திரு.சாரங்கன் வா.சா.2 ஆகவும், 13–ம் பிரதிவாதி திருமதி. அமிர்தம்மாள் வா.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. 1 முதல் 5



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:39:49 +0530

மற்றும் 16 பிரதிவாதிகள் தரப்பில் 1–ம் பிரதிவாதி திரு. முனியப்பிள்ளை பி.சா.1 ஆகவும், திரு. அண்ணாமலை பி.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, பி.சா.1ன் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதம்**

வாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் நன்னிப்பிள்ளை என்பவருக்கு நாராயணபிள்ளை, முனுசாமி பிள்ளை, அர்ஜூன பிள்ளை மற்றும் கிஷ்ட பிள்ளை என 4 குமாரர்கள் என்றும், மேற்படி நால்வரும் ஆடு, மாடுகள் மேய்த்தும், விவசாயம் செய்தும் குடும்பம் நடத்தி வந்தனர் என்றும், நன்னிப்பிள்ளையின் 2–வது குமாரர் முனுசாமிபிள்ளை என்றும், முனுசாமிபிள்ளையின் மனைவி கன்னம்மாள் என்றும், முனுசாமிபிள்ளை மற்றும் கன்னம்மாளுக்கு 1–ம் பிரதிவாதி முனியப்பிள்ளை, மாயப்பிள்ளை, 1–ம் வாதி சேட்டு ஆகியோர் குமாரர்கள் என்றும், நவநீதம் அம்மாள் மற்றும் 13–ம் பிரதிவாதி அமிர்தம்மாள் குமாரத்திகள் என்றும், அதில் மாயப்பிள்ளை 10 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார் என்றும், மாயப்பிள்ளைக்கு 9–ம் பிரதிவாதி கோபி, 10–ம் பிரதிவாதி பிரகாஷ், 12–ம் பிரதிவாதி சாரங்கன் (எ) வெள்ளை குமாரர்கள் என்றும், 8–ம் பிரதிவாதி கஸ்தூரி, 11–ம் பிரதிவாதி பச்சையம்மாள் குமாரத்திகள் என்றும், நவனீதம் அம்மாள் 2009–ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், இறந்த நவனீதம் அம்மாளுக்கு 1–ம் வாதியின் மனைவியான 2–ம் வாதி கிருஷ்ணவேனி குமாரத்தி என்றும், 6–ம் பிரதிவாதி பழனி, 7–ம் பிரதிவாதி அர்ஜூனன் குமாரர்கள் என்றும், 1–ம் பிரதிவாதி முனியப்பிள்ளைக்கு 2–ம் பிரதிவாதி ஹரிகிருஷ்ணன், 3–ம் பிரதிவாதி கண்ணன், 4–ம் பிரதிவாதி கஜேந்திரன் மற்றும் ஒரு ராஜேந்திரன் ஆகியோர் குமாரர்கள் என்றும், அதில் ராஜேந்திரன் இறந்துவிட்டார் என்றும், இறந்த



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:40:05 +0530

ராஜேந்திரனுக்கு 5–ம் பிரதிவாதி ராஜேஷ்வரி குமாரத்தி என்றும், 3–ம் பிரதிவாதி கண்ணனின் மனைவி 14–ம் பிரதிவாதி இயலரசி என்றும், வாதிகள் வழக்குரையில் தெரிவித்துள்ள உறவுமுறைகளை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், தாவா 4 மற்றும் 5–வது அயிட்ட சொத்துக்களை முனுசாமிப்பிள்ளையின் மனைவி கன்னம்மாள், நாராயணப்பிள்ளையின் மனைவி செல்லம்மாள், அர்ஜுனப்பிள்ளையின் மனைவி சின்னம்மாள் ஆகிய மூவரும் சேர்ந்து வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் முன்னிலைக்கு கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றும், 1–ம் வாதியின் தாயார் கன்னம்மாள் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 கிரைய பத்திரங்கள் முன்னிலைக்கு ஒரு ராஜகோபால் கவுண்டரிடமிருந்து தாவா 1–வது அயிட்ட சொத்தினை கிரையம் பெற்றார் என்றும், 1–ம் வாதியின் தந்தை முனுசாமிப்பிள்ளை தாவா 3–வது அயிட்ட சொத்தில் அவரது பங்கான 1/3 பாகமான 19 1/3 சென்ட்டையும், 4–ம் அயிட்ட சொத்தில் 15 1/3 சென்ட்டையும், 5–ம் அயிட்ட சொத்தில் 13 1/3 சென்ட்டையும், இதர 10 சென்ட்டையும் வரதப்பிள்ளையிடமிருந்து கிரையம் பெற்றார் என்றும், 1–ம் வாதியின் தந்தை தாவா 4, 5 அயிட்ட சொத்துக்களில் சின்னக்கன்னு அம்மாளின் 1/3 பாகத்தை வா.சா.ஆ.6 கிரையப்பத்திரம் முன்னிலைக்கு கிரையம் பெற்றார் என்றும், தாவா 2–வது அயிட்ட சொத்தில் 8 சென்ட் வீட்டு மனையை வா.சா.ஆ.4 கிரையப்பத்திரம் முன்னிலைக்கு 1–ம் வாதியின் தந்தை அப்துல் அஜீஸ் சாய்புவிடம் கிரையம் பெற்றார் என்றும், நாராயணப்பிள்ளை, முனுசாமிப்பிள்ளை, அர்ஜுனப்பிள்ளை மற்றும் கிஷ்டப்பிள்ளை ஆகிய அனைவரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்து சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னரே கூட்டுக்குடும்ப சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றும், தாவா சொத்துக்களை

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:40:11 +0530

தவிர்த்து இதர சொத்துக்களை சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் முனுசாமிப்பிள்ளையும், அவரது 3 குமாரர்களான 1-ம் பிரதிவாதி, 1-ம் வாதி மற்றும் மாயப்பிள்ளை ஆகியோர் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டனர் என்றும், அந்த பாகப்பிரிவினைக்கு நவனீதம் அம்மாள், 13-ம் பிரதிவாதியும் சம்மதம் தெரிவித்தார்கள் என்றும், தாவா சொத்துக்களில் 1, 2 அயிட்ட சொத்துக்கள் வீட்டு மனைகள் என்றும், 3 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றும், 1-ம் பிரதிவாதி மூத்தவர் என்பதால் தாவா சொத்துக்களுக்கான வா.சா.ஆ.10 1-ம் பிரதிவாதி முனியப்பிள்ளை பெயரிலேயே உள்ளது என்றும், தாவா சொத்துக்களை முனியப்பிள்ளையின் வாரிசுகளான 5 நபர்களும் பொதுவாகவே அனுபவித்து வருகிறார்கள் என்றும், நவனீதம் அம்மாளின் பாக உரிமையை பொறுத்து அவர் இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகளான 2-ம் வாதி, 6, 7 பிரதிவாதிகள் சேர்ந்து 1/5 பாகம் அடைய வேண்டும் என்றும், 1-ம் பிரதிவாதிக்கு 1/5 பாகம் உரிமை உள்ளது என்றும், மாயப்பிள்ளையின் வாரிசுகளான 8 முதல் 12 பிரதிவாதிகளுக்கு 1/5 பாகம் உரிமை உள்ளது என்றும், 13-ம் பிரதிவாதிக்கு 1/5 பாகம் உரிமை உள்ளது என்றும், 1, 2 வாதிகள் இருவருக்கும் 4/15 பாகம் உரிமை உள்ளது என்றும், பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்துக்களில் 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 1-ம் பிரதிவாதி 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லாது, வாதிகளை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றும், இது சம்மந்தமாக வாதிகள் தங்களது வழக்கறிஞர் மூலம் வா.சா.ஆ.11 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும், அந்த அறிவிப்பினை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு பொய்யான சங்கதிகளைக் கொண்டு வா.சா.ஆ.12 பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், அந்த பதில் அறிவிப்பில் தெரிவித்துள்ள

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:40:18 +0530

சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்றும், தாவா 3 முதல் 5 அயிட்ட சொத்துக்களை அபகரிக்க 1−ம் பிரதிவாதி அவரது மருமகனான 4−ம் பிரதிவாதி 14−ம் பிரதிவாதி பெயருக்கு வா.சா.ஆ.8 அடமான கடன் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றும், அந்த அடமான கடன் பத்திரம் சட்டப்படி செல்லாது, வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 4/15 பாகம் உரிமை உள்ளது என்பதனை வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்களைக் கொண்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், 1 முதல் 5 மற்றும் 14 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகளை தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களைக் கொண்டு நிரூபித்து வாதிகளின் வழக்கினை பொய்ப்பிக்கவில்லை என்றும், எனவே வாதிகளின் தாவாவினை அனுமதித்து தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு வாதிட்டார்.

**7. கற்றறிந்த 1 முதல் 5 மற்றும் 14ஆம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதம்**

1 முதல் 5 மற்றும் 14ஆம் பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிகள் வழக்குரையில் தெரிவித்துள்ள உறவுமுறைகள் பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்றும், தாவா சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்று வாதிகள் கூறுவதை மறுப்பதாகவும், தாவா சொத்துக்கள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்பதனையும், அதனை வாதிகளும் பிரதிவாதிகளும் பொதுவில் அனுபவித்து வருகின்றனர் என்பதனையும், வாதிகள் தகுந்த சாட்சியங்களைக் கொண்டு நிரூபிக்கவில்லை என்றும், சொத்துக்கள் சம்மந்தமாக 1ஆம் வாதி 1ஆம் பிரதிவாதியின் தந்தை உயிருடன்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:40:24 +0530

இருந்தபோதே 40 ஆண்டுகளுக்கு முன்னர் பாகப்பிரிவினை செய்து வைத்தார் என்பதனை வா.சா.1 குறுக்கு விசாரணையில் ஒத்துக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்றும், தாவா 2 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் 1ஆம் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் தந்தை முனியப்பிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதனை வாதிகள் தாக்கல் செய்த வழக்குரையில் 5வது பாராவில் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், அந்த வகையில் தாவா 2 முதல் 5 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து வாதிகளின் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதிகள் சுத்தமான கரங்களுடன் இவ்வழக்கினை தாக்கல் செய்யவில்லை என்றும், வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் வாதிகள் வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகளுக்கு முரண்பட்டே சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், குடும்ப சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்பதனை வாதிகள் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் எதற்காக தாவா சொத்துக்கள் மட்டும் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று வாதிகள் வழக்குரையில் தெளிவுபட விவரித்து எதுவும் கூறவில்லை என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டதாலேயே 1ஆம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றும், 1ஆம் பிரதிவாதி பெயரிலுள்ள பட்டாவினை வாதிகள் எந்தக்காலத்திலும் ஆட்சேபித்து அதனை ரத்து செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், தாவா 1முதல் 5அயிட்ட சொத்துக்கள் 1ஆம பிரதிவாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அச்சொத்தினை 1ஆம் பிரதிவாதி அடைந்து அனுபவித்து வந்து தாவா 1வது அயிட்ட சொத்தினை 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பாத்தியப்படுத்தி சுவாதீனம்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:42:14 +0530

ஒப்படைத்துவிட்டார் என்றும், 2 முதல் 5 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து 14ஆம் பிரதிவாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக அடமான கடன்பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றும், 1 முதல் 5 மற்றும் 14ஆம் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகளை வா.சா.1 முதல் 3வரையிலான சாட்சிகள் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவினை 1 முதல் 5 மற்றும் 14 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்குமாறு எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்து வாதிட்டார்.

8. <u>1 முதல் 5எழுவினாக்களுக்கான தீர்வுகள்</u>

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 4/15 பாகம் உரிமை உள்ளது என முதல்நிலை தீர்ப்பாணை வழங்கிட வேண்டியும், அதனை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவேண்டியும் மற்றும் இதர பரிகாரங்களுக்காக இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. தாவா 4 மற்றும் 5–வது அயிட்ட சொத்துக்களை முனுசாமிப்பிள்ளையின் மனைவி கன்னம்மாள், நாராயணப்பிள்ளையின் மனைவி செல்லம்மாள், அர்ஜுனப்பிள்ளையின் மனைவி சின்னம்மாள் ஆகிய மூவரும் சேர்ந்து கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றும், 1–ம் வாதியின் தாயார் கன்னம்மாள் ஒரு ராஜகோபால் கவுண்டரிடமிருந்து தாவா 1–வது அயிட்ட சொத்தினை கிரையம் பெற்றார் என்றும், 1–ம் வாதியின் தந்தை முனுசாமிப்பிள்ளை தாவா 3–வது அயிட்ட சொத்தில் அவரது பங்கான 1/3

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:42:20 +0530

பாகமான 19 1/3 சென்ட்டையும், 4-ம் அயிட்ட சொத்தில் 15 1/3 சென்ட்டையும், 5-ம் அயிட்ட சொத்தில் 13 1/3 சென்ட்டையும், இதர 10 சென்ட்டையும் வரதப்பிள்ளையிடமிருந்து கிரையம் பெற்றார் என்றும், 1-ம் வாதியின் தந்தை தாவா 4, 5 அயிட்ட சொத்துக்களில் சின்னக்கன்னு அம்மாளின் 1/3 பாகத்தை கிரையம் பெற்றார் என்றும், தாவா 2-வது அயிட்ட சொத்தில் 8 சென்ட் வீட்டு மனையை 1-ம் வாதியின் தந்தை அப்துல் அஜீஸ் சாய்புவிடம் கிரையம் பெற்றார் என்றும், நாராயணப்பிள்ளை, முனுசாமிப்பிள்ளை, அர்ஜூனப்பிள்ளை மற்றும் கிஷ்டப்பிள்ளை ஆகிய அனைவரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்து சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னரே கூட்டுக்குடும்ப சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றும், தாவா சொத்துக்களை தவிர்த்து இதர சொத்துக்களை சுமாா 35 ஆண்டுகளுக்கு முன்னர் முனுசாமிப்பிள்ளையும், அவரது 3 குமாரர்களான 1-ம் பிரதிவாதி, 1-ம் வாதி மற்றும் மாயப்பிள்ளை ஆகியோர் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டனர் என்றும், அந்த பாகப்பிரிவினைக்கு நவனீதம் அம்மாள், 13-ம் பிரதிவாதியும் சம்மதம் தெரிவித்தார்கள் என்றும், தாவா சொத்துக்களில் 1, 2 அயிட்ட சொத்துக்கள் வீட்டு மனைகள் என்றும், 3 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றும், தாவா சொத்துக்களை முனியப்பிள்ளையின் வாரிசுகளான 5 நபர்களும் பொதுவாகவே அனுபவித்து வருகிறார்கள் என்றும், நவனீதம் அம்மாளின் பாக உரிமையை பொறுத்து அவர் இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகளான 2-ம் வாதி, 6, 7 பிரதிவாதிகள் சேர்ந்து 1/5 பாகம் அடைய வேண்டும் என்றும், 1-ம் பிரதிவாதிக்கு 1/5 பாகம் உரிமை உள்ளது என்றும், மாயப்பிள்ளையின் வாரிசுகளான 8 முதல் 12 பிரதிவாதிகளுக்கு 1/5 பாகம் உரிமை உள்ளது என்றும், 13-ம் பிரதிவாதிக்கு 1/5 பாகம் உரிமை உள்ளது

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:42:28 +0530

என்றும், 1, 2 வாதிகள் இருவருக்கும் 4/15 பாகம் உரிமை உள்ளது என்றும், பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்துக்களில் 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 1–ம் பிரதிவாதி 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த தான செட்டில்மென்ட் பத்திரம் சட்டப்படி செல்லாது, வாதிகளை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றும், தாவா 3 முதல் 5 அயிட்ட சொத்துக்களை அபகரிக்க 1–ம் பிரதிவாதி அவரது மருமகனான 4–ம் பிரதிவாதி 14–ம் பிரதிவாதி பெயருக்கு அடமான கடன் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றும், அந்த அடமான கடன் பத்திரம் சட்டப்படி செல்லாது, வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 4/15 பாகம் உரிமை உள்ளது என்று வாதிகள் தரப்பில் வழக்கானது முன்வைக்கப்பட்டுள்ளது.

10. வாதிகள் வழக்குரையில் தெரிவித்துள்ள உறவு முறைகள் பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. தாவா 4 மற்றும் 5 அயிட்ட சொத்துக்கள் செல்லம்மாள், கன்னம்மாள் மற்றும் சின்னக்கண்ணம்மாள் பெயரில் கூட்டாக கிரையம் பெறப்பட்டதே தவிர மேற்படி கிரையத்திற்கு எவ்வித தொகையும் அவர்களால் கொடுக்கவில்லை. அச்சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் தந்தை முனுசாமிபிள்ளை பெயரில் சொந்த உழைப்பைக்கொண்டும், அதில் வந்த வருவாயைக் கொண்டும் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களாகும். நாராயணப்பிள்ளை, முனுசாமிபிள்ளை, அர்ஜுனப்பிள்ளை மற்றும் கிருஷ்ணப்பிள்ளை ஆகிய நால்வரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்து கூட்டுக்குடும்ப சொத்துக்களை சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் பாகம் பிரித்துக் கொண்டார்கள். 1ஆம் வாதி மற்றும் 1ஆம பிரதிவாதியின் தந்தை முனுசாமி பிள்ளை தாயார் கண்ணம்மாள் உயிருடன் இருந்தபோதே மூதாதையர் சொத்துக்கள்

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.04.30 11:42:33 +0530

முனுசாமி பிள்ளை மற்றும் கண்ணம்மாள் கிரையம் பெற்ற சொத்துக்கள் ஆகிய அனைத்தையும், 1ஆம் பிரதிவாதி மற்றும் மாயப்பிள்ளை பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டனர் என்றும், அந்த பாகப்பிரிவினையின் போதே தாவா சொத்துக்களும் பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றும், அந்த பாகப்பிரிவினையானது நடைமுறைக்கு வந்து அவரவர் பாகத்தினை அவரவர் அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்துக்களுக்கும், வாதிகளுக்கும் எவ்வித பாத்தியமும், உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதிக்கு பாகமாக வந்த சொத்துக்கள் என்பதால் தாவா 1, 2அயிட்ட சொத்துக்களை 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பாத்தியப்படுத்திவிட்டார் என்றும், தாவா சொத்துக்கள் குறித்து ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ள நிலையில் அதனை மறைத்து வாதிகள் இத்தாவாவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அதனால் வாதிகளின் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்று என்று 1 முதல் 5 மற்றும் 14 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கானது முன்வைக்கப்பட்டுள்ளது.

11. நன்னிப்பிள்ளை என்பவருக்கு நாராயணபிள்ளை, முனுசாமி பிள்ளை, அர்ஜூன பிள்ளை மற்றும் கிஷ்ட பிள்ளை என 4 குமாரர்கள் என்பதும், மேற்படி நால்வரும் ஆடு, மாடுகள் மேய்த்தும், விவசாயம் செய்தும் குடும்பம் நடத்தி வந்தனர் என்பதும், நன்னிப்பிள்ளையின் 2–வது குமாரர் முனுசாமிபிள்ளை என்றும், முனுசாமிபிள்ளையின் மனைவி கன்னம்மாள் என்பதும், முனுசாமிபிள்ளை மற்றும் கன்னம்மாளுக்கு 1–ம் பிரதிவாதி முனியப்பிள்ளை, மாயப்பிள்ளை, 1–ம் வாதி சேட்டு ஆகியோர் குமாரர்கள் என்பதும், நவநீதம் அம்மாள் மற்றும் 13–ம் பிரதிவாதி அமிர்தம்மாள்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:42:40 +0530

குமாரத்திகள் என்பதும், அதில் மாயப்பிள்ளை 10 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார் என்பதும், மாயப்பிள்ளைக்கு 9–ம் பிரதிவாதி கோபி, 10–ம் பிரதிவாதி பிரகாஷ், 12–ம் பிரதிவாதி சாரங்கன் (எ) வெள்ளை குமாரர்கள் என்பதும், 8–ம் பிரதிவாதி கஸ்தூரி, 11–ம் பிரதிவாதி பச்சையம்மாள் குமாரத்திகள் என்பதும், நவனீதம் அம்மாள் 2009–ம் ஆண்டு இறந்துவிட்டார் என்பதும், இறந்த நவனீதம் அம்மாளுக்கு 1–ம் வாதியின் மனைவியான 2–ம் வாதி கிருஷ்ணவேனி குமாரத்தி என்பதும், 6–ம் பிரதிவாதி பழனி, 7–ம் பிரதிவாதி அர்ஜுனன் குமாரர்கள் என்பதும், 1–ம் பிரதிவாதி முனியப்பிள்ளைக்கு 2–ம் பிரதிவாதி ஹரிகிருஷ்ணன், 3–ம் பிரதிவாதி கண்ணன், 4–ம் பிரதிவாதி கஜேந்திரன் மற்றும் ஒரு ராஜேந்திரன் ஆகியோர் குமாரர்கள் என்பதும், அதில் ராஜேந்திரன் இறந்துவிட்டார் என்றும், இறந்த ராஜேந்திரனுக்கு 5–ம் பிரதிவாதி ராஜேஷ்வரி குமாரத்தி என்பதும், 3–ம் பிரதிவாதி கண்ணனின் மனைவி 14–ம் பிரதிவாதி இயலரசி என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

12. இத்தாவாவில் 2 முதல் 5 மற்றும் 14ஆம் பிரதிவாதிகள் தரப்பில் தனி தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. 1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை 2 முதல் 5 மற்றும் 14ஆம் பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இத்தாவாவின் 6 முதல் 13 மற்றும் 15 முதல் 17 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டி அழைப்பாணை பிறப்பித்தும், இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்பதனையும், அச்சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாமல்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:42:46 +0530

வாதிகள் மற்றும் 1 முதல் 13 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் தான் உள்ளது என்பதனையும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 4/15 பாக உரிமையுள்ளது என்பதனையும், தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்களைக் கொண்டு நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வழக்கு தாக்கல் செய்த வாதிகளை சார்ந்ததாகும்.

13. வாதிகள் தரப்பில் 1ஆம் வாதியான சேட்டு முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மூலம் குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளார். வாதிகள் தரப்பில் 27.11.1956 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் தாவா 4 மற்றும் 5 அயிட்ட சொத்துக்களை சையத் தஸ்தகிர் சாயபு வகையறாவிடமிருந்து 1ஆம் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் தாயார் கன்னம்மாள், நாராயணசாமி பிள்ளையின் பாரியாள் செல்லம்மாள் அர்ஜுனப்பிள்ளையின் பாரியாள் சின்னக்கன்னு அம்மாள் ஆகிய மூவரும் சேர்ந்து கிரையம் பெற்றதாக உள்ளது.

14. வாதிகள் தரப்பில் 06.10.1958 தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தில் தாவா 4 மற்றும் 5 அயிட்ட சொத்துக்களை சையத் பாஷா சாயபு ஆனவர் 1ஆம் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் தாயார் கன்னம்மாள், நாராயணசாமி பிள்ளையின் பாரியாள் செல்லம்மாள் அர்ஜுனப்பிள்ளையின் பாரியாள் சின்னக்கன்னு அம்மாள் ஆகிய மூவருக்கும் பாக பாத்திய விடுதலைப்பத்திரம்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:42:53 +0530

எழுதிக்கொடுத்தாக உள்ளது.

15. வாதிகள் தரப்பில் 11.09.1959தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 கிரையப்பத்திரத்தில் தாவா 1வது அயிட்ட சொத்தில் 1 ஏக்கர் 68 சென்டில் 0.13 சென்டினை சின்னக்கவுண்டர் குமாரர் ராஜகோபால் கவுண்டரிடமிருந்து 1ஆம் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் தாயார் கன்னம்மாள் கிரையம் பெற்றதாக உள்ளது. வாதிகள் தரப்பில் 01.11.1963தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 கிரையப்பத்திரத்தில் தாவா 1வது அயிட்ட சொத்தில் 1 ஏக்கர் 68 சென்டில் 0.20 சென்டினை சின்னக்கவுண்டர் குமாரர் ராஜகோபால் கவுண்டரிடமிருந்து 1ஆம் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் தாயார் கன்னம்மாள் கிரையம் பெற்றதாக உள்ளது.

16. வாதிகள் தரப்பில் 02.01.1967தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 கிரையப்பத்திரத்தில் தாவா 2வது அயிட்ட சொத்தினை அப்துல் அஜித் சாயபு என்பவரிடமிருந்து 1ஆம் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் தந்தை முனுசாமிபிள்ளை கிரையம் பெற்றதாக உள்ளது. வாதிகள் தரப்பில் 16.10.1972தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 கிரையப்பத்திரத்தில் தாவா 3 முதல் 5 அயிட்ட சொத்துக்களில் பொதுவில் 3ல் 1 பாகத்தினை நல்லிப்பிள்ளையின் குமாரர் அர்ஜுனப்பிள்ளை, அர்ஜுனப்பிள்ளையின் மனைவி சின்னக்கன்னு அம்மாள்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:42:58 +0530

ஆகியோரிடமிருந்து 1ஆம் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் தந்தை முனுசாமிபிள்ளை கிரையம் பெற்றதாக உள்ளது. வாதிகள் தரப்பில் 07.02.1974தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 கிரையப்பத்திரத்தில் தாவா 3 முதல் 5 அயிட்ட சொத்துக்களில் பொதுவில் 3ல் 1 பாகத்தினை வரதபிள்ளையிடமிருந்து 1ஆம் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் தந்தை முனுசாமிபிள்ளை கிரையம் பெற்றதாக உள்ளது.

17. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான கிரையப்பத்திரங்களை பொறுத்து 1 முதல் 5 மற்றும்1 4ஆம் பிரதிவாதிகள் தரப்பில் எந்தவொரு ஆட்சேபனையும் செய்யவில்லை. வா.சா.ஆ.1 முதல் 7 வரையிலான கிரையப்பத்திரங்களில் கண்டுள்ள சொத்துக்கள் கிரையம் பெற்றது குறித்து 1ஆம் பிரதிவாதியான பி.சா.1 குறுக்கவிசாரணையில் ஒத்துக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களுக்கான கணினி பட்டா தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 பட்டாவில் பட்டா எண்.702 தாவா 1 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதி முனியப்பிள்ளையின் பெயரிலேயே பதிவாகியுள்ளது என்பதை அறிய முடிகிறது.

18. வாதிகள் இத்தாவாவினை தாக்கல் செய்வதற்கு முன்பாக 30.10.2021 தேதியன்று 1 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் செய்யாறு வட்டாட்சியருக்கு தாவா சொத்துக்களில் வாதிகளுக்கும் பாகஉரிமை உள்ளது என்றும், தாவா சொத்துக்களைப் பொறுத்து உள்ள பட்டாவினை உட்பிரிவு செய்து தனிப்பட்டா மாற்றம் செய்யக்கூடாது என வாதிகளால் வழக்கறிஞர் அறிவிப்பு

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.04.30 11:43:04 +0530

அனுப்பப்பட்டுள்ளது என்பது வா.சா.ஆ.11 ஆவணத்திலிருந்து அறிய முடிகிறது. வாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவித்துள்ள சங்கதிகளை மறுத்து 1ஆம் பிரதிவாதி தரப்பில் 12.11.2021 தேதியன்று 1 முதல் 5 பிரதிவாதிகளால் வா.சா.ஆ.12 பதிலறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.12 பதிலறிவிப்பில் தாவா சொத்துக்கள் மற்றும் கூட்டுக்குடும்ப சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டு அவரவர் பாகத்தினை அவரவர் அடைந்து அனுபவித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.12 பதிலறிவிப்பில் தெரிவித்துள்ள சங்கதிகளை மறுத்து வாதிகள் தரப்பில் எந்தவொரு பதில் அறிவிப்பும் (Re–Joinder) கொடுக்கவில்லை என்பது தாவா ஆவணங்களிலிருந்து அறியமுடிகிறது.

19. 1 முதல் 5 மற்றும் 14ஆம் பிரதிவாதி தரப்பில் 1ஆம் பிரதிவாதி முனியப்பிள்ளை முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் மூலம் குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளார். 1 முதல் 5 மற்றும் 14ஆம் பிரதிவாதி தரப்பில் 22.11.1994, 30.11.1920, 17.04.1988 மற்றும் 26.04.1977 தேதியிட்ட கிரையப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.16 வரையிலான கிரையப்பத்திரங்களிலிருந்து தாவா சொத்துக்கள் அல்லாத வேறு சில சொத்துக்களை 1ஆம் பிரதிவாதி முனியப்பிள்ளை கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

20. 1 முதல் 5 மற்றும் 14 பிரதிவாதிகள் தரப்பில் 09.03.2009 தேதியிட்ட



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:43:12 +0530

அக்குவிடுதலை பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டு பி.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.17 அக்குவிடுதலைப்பத்திரத்தில் தாவா சொத்துக்கள் அல்லாத சர்வே எண்.182/2ல் 0.81.0 ஏர்ஸில் 0.27 ஏர்ஸ் (0.67 சென்ட்)ஐ 1ஆம் வாதி 1ஆம் பிரதிவாதிக்கு அக்குவிடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தாக உள்ளது. 1 முதல் 5 மற்றும் 14ஆம் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகள் சம்மந்தமாக 1ஆம் வாதியான வா.சா.1 ஐ கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தபோது கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

> **பூர்வீக சொத்து எவ்வளவு இருந்தது என்றால் நினைவில்லை. மொத்த சொத்துமே என் தகப்பனாரும, தாயாரும் சம்பாதித்த சொத்துக்கள். தாவா சொத்துக்கள் என் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். வழக்கு சொத்துக்கள் என் தாயார் பெயரில் உள்ள சொத்துக்ள் ஆகும். என் தாயார் பெயரில் உள்ள சொத்துக்கள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தகப்பனார் கிரயம் வாங்கிய சொத்துக்களை பாகம் கொடுத்துவிட்டார் அதனால் வழக்கில் சேர்க்கவில்லை. என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்கள் சம்மந்தமாக இந்த வழக்கே இல்லை. வழக்குரையல் பூர்வீக சொத்துக்களை பொறுத்து பாகம் ஏற்பட்டுவிட்டது எனவும், என் பெற்றோர்கள் விட்டுச்சென்ற சொத்துக்கள் சம்மந்தமாகவும் பாகம் ஏற்படவில்லை என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா சொத்துக்கள் சம்மந்தமாக இவ்வழக்கே இல்லை. என் அப்பா சொத்துக்கள் சம்மந்தமாக பாகம் ஏற்பட்டு 40 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். அப்போது என் பெற்றோர்கள் உயிருடன் இருந்தார்கள். என் தகப்பனார் முன்னின்று பாகம் செய்துவைத்தார். என் தகப்பனார் சொத்துக்கள் சம்மந்தமாக பாகம் ஏற்பட்டபோது எழுத்து பூர்வமாக ஆவணம் ஏற்படவில்லை..... என் அப்பா சொத்தில் ச.எண்.377-ல் 1 ஏக்கர் 33 சென்ட் பாகத்தில் வந்தது. மாயப்பிள்ளைக்கு 1 ஏக்கர் 50 சென்ட்டும், கிணறு, பம்புசெட் பாகத்தில் வந்தது. முனியப்பிள்ளைக்கு 1 ஏக்கர் 50 சென்ட்டும், கிணறு, பம்புசெட் பாகத்தில் வந்தது. முனியப்பிள்ளைக்கு 1 ஏக்கர் 80 சென்ட்டும், கிணறு, பம்புசெட் பாகத்தில் வந்தது. பாகப்பிரிவினைக்கு பிறகு அவரவர்கள் பெயருக்கு பட்டா மாறிவிட்டது. என் தாயார் பெயரில் இருந்த**



M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:43:18 +0530

**சொத்துக்களுக்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயருக்கு மாறிவிட்டது.... மேற்சொன்ன 2 ஏக்கர் 60 செண்ட் நிலத்தில் 60 செண்ட் நிலத்தை எனக்கு தனிப்பட்ட முறையில் கொடுத்தார்கள். பாக்கி நிலத்தை 3 பேருக்கும் சரிசமமாக பிரிக்கவேண்டும் என்று முடிவு செய்தார்கள்.... என் தகப்பனார் இருந்தபோதே பாகம் ஏற்பட்டு தனித்தனியாக சென்றுவிட்டோம்...... மகூதி மானியம் நிலம் 3 ஏக்கர் 27 செண்ட் 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் வாங்கப்பட்டது அதற்கான பணத்தை என் தகப்பனார் தான் கட்டினார். மேற்சொன்ன 3 ஏக்கர் 27 செண்ட் நிலத்தை நானும் என் சகோதரர்களும் சமமாக பிரித்துக்கொண்டோம்....... எனக்கு வீட்டுமனையில் வந்த 7 செண்ட் பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு கொடுப்தாக உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன்படி பட்டா 1ம் பிரதிவாதி பெயரில்தான் உள்ளது என்றால் என் பெற்றோர்கள் இறந்தபிறகு பட்டா அவர் பெயரில் உள்ளது. 1ம் பிரதிவாதி பெயரில பட்டா மாறி 10 வருடங்கள் இருக்கும். பாகப்பிரிவினைக்கு பிறகு 37 செண்ட்டிற்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட 1ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா இருந்து வருகிறது என்று சொன்னால் பட்டா மாறியது உண்மை ஆனால் யாருக்கும் கொடுக்கவில்லை. பட்டா மாறுதல் செய்தது சம்மந்தமாக வருவாய் துறையில் சென்று பார்க்கவில்லை....**

21. வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட 13ஆம் பிரதிவாதியான வா.சா.3 ஐ கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கவிசாரணை செய்தபொழுது கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

**நன்னபிள்ளைக்கு நாராயண பிள்ளை, முனுசாமி பிள்ளை, அர்ஜூன பிள்ளை, கிருஷ்ண பிள்ளை ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி நபர்கள் பாகப்பிரிவினை செய்துகொண்டதில் கிராம காலனிக்கு ஓரமாக உள்ள 2 ஏக்கர் 60 செண்ட்டானது என் தந்தைக்கு பாகமாக வந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்தினை வைத்து எனது தந்தை, எனது தாயார் மற்றும் எனது தந்தை பெயரில் சில சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி மகன்களுக்கு எனது தந்தை என் அப்பாவின் பெயரில் உள்ள சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்துவிட்டார், ஆனால் எனது தாயார் பெயரில் உள்ள சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவில்லை. மேற்படி பாகப்பிரிவினையானது என் தாய், தந்தையர் உயிருடன் இருந்தபோதே ஏற்பட்டது என்றால் சரிதான்..... மேற்படி மூவரும்**



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:43:24 +0530

**பாகப்பிரிவினை செய்துகொண்டார்களா இல்லையா என்பது குறித்து நாளது தேதி வரை எனக்கு தெரியாது. அதனால், யார் யாருக்கு எந்தெந்த சொத்து பாகமாக ஒதுக்கப்பட்டது என்று எனக்கு எதுவும் தெரியாது. அதேபோல், யார் யார் எந்தெந்த சொத்தினை அனுபவிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் நான் வெளியூரில் இருப்பதால் அது எனக்கு தெரியாது...... நான் வெளியூரில் இருப்பதால் எங்கள் குடும்பத்தில் என்ன நடந்தது என்று எனக்கு சரியாக தெரியாது என்று சொன்னால் சரிதான்....... என் அம்மாவின் சொத்து எங்கு உள்ளது என்றால் குளத்திற்கு மேல்பக்கமாக உள்ளது. அது எவ்வளவு ஏக்கர் இருக்கும் என்றால் 1 ஏக்கர் மிச்சம் இருக்கும். அந்த சொத்தினை தற்போது யார் அனுபவித்து வருகிறார் என்றால் 1-ம் பிரதிவாதி முனியப்பிள்ளைதான் அனுபவித்து வருகிறார். என் தாய் தந்தையர் இறந்த பிறகு என் தாயார் பெயரில் உள்ள சொத்தினை 1-ம் பிரதிவாதி முனியப்பிள்ளைதான் அனுபவித்து வருகிறார். நானும், எனது அக்கா நவனீதமும் சொத்துக்களில் எந்தபாகமும் எங்களுக்கு வேண்டாம் என்றும், அண்ணன் தம்பிகளே எடுத்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டோம் என்று சொன்னால் சரிதான்.......**

22. 1ஆம் பிரதிவாதியான பி.சா.1ஐ கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தபோது கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

**என் தந்தை உயிருடன் இருக்கும்போதே விவசாய நிலங்களை எங்கள் சகோதரர்களுக்குள் பாகம் பிரித்து கொடுத்துவிட்டார். எனக்கு அதில் தனித்தனியாக ஒவ்வொரு இடத்திலும் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது. மாயப்பிள்ளைக்கு மொத்தமாக 3 ஏக்கர் பாகமாக கொடுக்கப்பட்டது. எனக்கு பாகம் பிரித்து கொடுக்கப்பட்டதற்கு பிறகு நான் தனியாக 2 ஏக்கருக்கு மேல் சொத்து வாங்கியிருப்பேன். அதேபோல், எனது தம்பி மாயப்பிள்ளையும் சுமார் 2, 3 பம்பு செட்டுக்கள் கிரையம வாங்கியுள்ளார்.... எங்களுக்கு பாகமாக வந்த சொத்தில் எனது பெயரில் தனி பட்டாவும், மாயப்பிள்ளை பெயரில் தனிப்பட்டாவும், 1-ம் வாதி சேட்டு பெயரில் தனிப்பட்டாவும் உள்ளது என்றால் சரிதான்..... தாவா சொத்துக்கள் இதுவரையில பாகப்பிரிவினை செய்யாமல் பொதுவில்தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, பாகப்பிரிவினை ஆகிவிட்டது...... 2 ஏக்கர் 60 சென்ட்டில் 60 சென்ட் 1-ம் வாதி சேட்டுவுக்கு கொடுத்துவிட்டு, மீதமுள்ள 2 ஏக்கரில் நான், சேட்டு, மாயப்பிள்ளை ஆகியோர் தலா**



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:43:32 +0530

**67 சென்ட் என பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். எனக்கு வந்த 67 சென்ட்டினை நான் சேட்டுவுக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் கிரையம் கொடுக்கவில்லை, நாங்கள் இருவரும் மாற்றிக்கொண்டோம்...... நான் 25.10.2021–ல் எனது மகன்கள் மற்றும் மகள் பெயரில் எழுதி வைத்த சொத்துக்கள் என் தாய், தந்தையர் பெயரில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாத சொத்துக்கள் என்றாலும், பட்டா எனது பெயரில் உள்ளதை அனுகூலமாகக் கொண்டு நான் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளேன் என்றாலும், அந்த ஆவணம் சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல..... தாவா 1–வது அயிட்ட சொத்தில் 37 சென்ட்டில் 7 சென்ட் சேட்டுவுக்கு பாகமாக சென்றது, மீதமுள்ள 30 சென்ட் எனக்கு பாகமாக வந்தது, மாயப்பிள்ளைக்கு தெரு பக்கம் வீட்டு மனை பாகமாக ஒதுக்கப்பட்டது......**

23. 1முதல் 5 மற்றும் 14 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகளை 1ஆம் வாதியான வா.சா.1 குறுக்குவிசாரணையில் ஒத்துக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். தாவா சொத்துக்கள் அனைத்தும் பாகம் பிரிக்கப்படாமல் வாதிகள் மற்றும் 1 முதல் 13 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்று வாதிகள் வழக்குரையில் தெரிவித்துள்ளார்கள். ஆனால் தாவா சொத்துக்கள் இதுவரை பாகம் பிரிக்கப்படாமல் வாதிகள் மற்றும் 1 முதல் 13 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதற்கு ஆதாரமாக எந்தவொரு வருவாய்த்துறை ஆவணங்களையும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்து நிரூபிக்கவில்லை. தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.10 பட்டாவும், 1ஆம் பிரதிவாதி முனியப்பிள்ளை பெயரிலேயே உள்ளது. வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட 13ஆம் பிரதிவாதியான வ.சா.3ம் குறுக்குவிசாரணையில் தாவா சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதி முனியப்பிள்ளை அனுபவித்து வருகிறார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அந்த வகையில் தாவா சொத்துக்களை 1ஆம் பிரதிவாதி



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:43:38 +0530

முனியப்பிள்ளை அனுபவித்து வந்துள்ளார் என்பதும், அதனால் தாவா சொத்துக்களுக்கான வா.சா.ஆ.10 பட்டாவானது முனியப்பிள்ளை பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்பதும் மிகத்தெளிவாக தெரியவருகிறது.

24. மேலும் 1ம் வாதியான வா.சா.1 குறுக்குவிசாரணையின் போது 40 ஆண்டுகளுக்கு முன்பே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றும், அந்த சமயத்தில் தனது பெற்றோர்கள் இருந்தார்கள் என்றும், தனது தந்தை தான் முன்னின்று பாகம் செய்து வைத்தார் என்றும், அது சம்மந்தமாக ஆவணம் ஏற்படவில்லை என்றும் ஒத்துக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே 40 ஆண்டுகளுக்கு முன்னர் தனது தந்தை முன்னிலையில் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று 1ஆம் வாதியான வா.சா.1 குறுக்குவிசாரணையில் ஒத்துக்கொண்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் தனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து தான் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றும், தாயாரின் பேரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் ஏற்படவில்லை என்று கூறுவதும், ஏற்கத்தக்க வகையிலும், நம்பதகுந்த வகையிலும் இல்லை.

25. தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே வாதிகளுக்கும், 1ஆம் பிரதிவாதிக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்பது மிகத்தெளிவாக தெரியவருகிறது. தாவா சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ள நிலையில் மீண்டும் அச்சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கேட்பதும் சட்டப்படி தவறான ஒன்றாகும். தாவா சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அவர் அச்சொத்துக்களை அடைந்து அவரது பெயரில் பட்டா மாற்றம் செய்துக்கொண்டு அனுபவித்து வந்துள்ளார்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:43:43 +0530

என்பது வா.சா–ஆ.10 பட்டாவிலிருந்து அறிய முடிகிறது. அந்த வகையில் தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து 1ஆம் பிரதிவாதி 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயருக்கு 25.10.2021 தேதியன்று பி.சா.ஆ.5 தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி பாத்தியப்படுத்தியுள்ளார்.

26. மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.8 பதிவு அடமான கடன் பத்திரத்திலிருந்து 1ஆம் பிரதிவாதி தாவா 3 முதல் 5 அயிட்ட சொத்துக்களை 05.06.2020 தேதியன்று 3ம் பிரதிவாதியின் மனைவியான 14ஆம் பிரதிவாதியிடம் ரூ.5,00,000/– கடன் பெற்றுக்கொண்டு 14ம் பிரதிவாதிக்கு அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேலும் பி.சா.ஆ.6 பதிவு பைசல் இரசீதிலிருந்து 1ஆம் பிரதிவாதி தாவா 3 முதல் 5 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து செய்யாறு கூட்டுறவு நிலவள வங்கியில் ரூ.11,000/– கடன் பெற்று அந்த கடனை அசல் வட்டியாக பைசல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. 1ஆம் பிரதிவாதிக்கு பாகமாக வந்த தாவா சொத்துக்களை 1ஆம் பிரதிவாதி அனுபவித்து வந்து அச்சொத்துக்களில் 1, 2 அயிட்ட சொத்துக்களை 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பாத்தியப்படுத்த அச்சொத்துக்களின் உரிமையாளர் என்ற முறையில் 1ஆம் பிரதிவாதிக்கு முழு சட்ட உரிமையும் உள்ளது. அதன் அடிப்படையிலேயே 1ஆம் பிரதிவாதி 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பாத்தியப்படுத்தியுள்ளார். அவ்வாறு தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து 1ஆம் பிரதிவாதி 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் எழுதிவைத்த பி.சா.ஆ.5 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தினை ஆட்சேபனை செய்வதற்கு வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. மேலும் 1ஆம் பிரதிவாதி தாவா 3 முதல் 5 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 3ஆம் பிரதிவாதியின்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:43:49 +0530

மனைவியான 14ஆம் பிரதிவாதி பெயரில் எழுதிவைத்த வா.சா.ஆ.8 அடமான கடன் பத்திரத்தினை ஆட்சேபிப்பதற்கு வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. 25.10.2021 தேதியிட்ட பி.சா.ஆ.5 தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் 05.06.2020 தேதியிட்ட வா.சா.ஆ.8 அடமான கடன் பத்திரம் வாதிகளைப் பொறுத்து சட்டப்படி செல்லக்கூடியதும் வாதிகளை கட்டுப்படுத்தக்கூடிய ஒன்றாகும்.

27. தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதனை அச்சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1 முதல் 13 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதனையும் தாவா சொத்துக்களை வாதிகளுக்கு 4/15 பாக உரிமை உள்ளது என்பதனையும், வாதிகள் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்களைக் கொண்டு நிரூபிக்கவில்லை என்பதால் தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம், 25.10.2021 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என விளம்புகை கோரும் பரிகாரம், 05.06.2020 தேதியிட்ட அடமான கடன் பத்திரம் செல்லாது என விளம்புகை கோரும் பரிகாரம் மற்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என்று எழுவினா 1 முதல் 5ஐ பொறுத்து வாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

28. எழுவினா 1 முதல் 5 ஐ பொறுத்து வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதால் வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என எழுவின 6 ஐ பொறுத்து தீர்வு காணப்படுகிறது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:43:55 +0530

இறுதியாக வாதிகள் தாக்கல் செய்துள்ள இத்தாவாவானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.04.30 11:44:01 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u> :

வா.சா.1 – சேட்டு, த/பெ.முனுசாமிபிள்ளை
வா.சா.2 – சாரங்கன், த/பெ.மாயன்,
வா.சா.3 – அமிர்தம்மாள், க/பெ.ஆறுமுகம்,

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | | |
|---|---|---|
| வ.சா–ஆ.1 | 27.11.1956 | கிரைய ஆவணத்தின் சான்று நகல் |
| வ.சா–ஆ.2 | 06.10.1958 | பாத்திய விடுதலை ஆவணத்தின் சான்று நகல் |
| வ.சா–ஆ.3 | 11.09.1959 | கிரய ஆவணத்தின் சான்று நகல் |
| வ.சா–ஆ.4 | 01.11.1963 | கிரய ஆவணத்தின் சான்று நகல் |
| வ.சா–ஆ.5 | 02.01.1967 | கிரய ஆவணத்தின் சான்று நகல் |
| வ.சா–ஆ.6 | 16.10.1972 | கிரய ஆவணத்தின் சான்று நகல் |
| வ.சா–ஆ.7 | 07.02.1974 | கிரய ஆவணத்தின் சான்று நகல் |
| வ.சா–ஆ.8 | 05.06.2020 | அடமான கடன் ஆவணத்தின் சான்று நகல் |
| வ.சா–ஆ.9 | 25.10.2021 | செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்று நகல் |
| வ.சா–ஆ.10 | – | விண்ணமங்கலம் கிராமம் பட்டா எண்.702ன் கணினி பட்டா |
| வ.சா–ஆ.11 | 30.10.2021 | அறிவிப்பு |



M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.04.30 11:44:08 +0530

| | | |
|---|---|---|
| வ.சா–ஆ.12 | 12.11.2021 | பதில் அறிவிப்பு |
| வ.சா–ஆ.13 | – | தபால் ஒப்புதல் அட்டை |
| வ.சா–ஆ.14 | – | தபால் ஒப்புதல் அட்டை |
| வ.சா–ஆ.15 | – | தபால் ஒப்புதல் அட்டை |
| வ.சா–ஆ.16 | – | தபால் ஒப்புதல் அட்டை |
| வ.சா–ஆ.17 | – | தபால் ஒப்புதல் அட்டை |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>**

பி.சா.1 – முனியபிள்ளை, த/பெ.முனுசாமி,
பி.சா.2 – அண்ணாமலை, த/பெ.சின்னபையன்,

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் –</u>**

| | | |
|---|---|---|
| பி.சா–ஆ.1 | 22.11.1994 | கிரைய பத்திரத்தின் இணையவழி நகல் |
| பி.சா–ஆ.2 | 30.01.2020 | கிரைய பத்திரத்தின் இணையவழி நகல் |
| பி.சா–ஆ.3 | 17.04.1988 | கிரைய பத்திரத்தின் இணையவழி நகல் |
| பி.சா–ஆ.4 | 17.04.1988 | கிரைய பத்திரத்தின் இணையவழி நகல் |
| பி.சா–ஆ.5 | 25.10.2021 | தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் |
| பி.சா–ஆ.6 | 01.06.2020 | செய்யாறு கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் வழங்கப்பட்ட பைசல் ரசீது. |
| பி.சா–ஆ.7 | – | பட்டா எண்.702க்கு வருவாய் துறையினரால் வழங்கப்பட்ட நில உரிமை சான்றிதழ் இணையவழி நகல். |
| பி.சா–ஆ.8 | – | பட்டா எண்.2117ல் கஜேந்திரன் பெயரில் உள்ள கணினி பட்டா இணைய வழி நகல் |
| பி.சா–ஆ.9 | – | பட்டா எண்.2116ல் கண்ணன் பெயரில் உள்ள |



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:44:15 +0530

| | | |
|---|---|---|
| | | கணினி பட்டா இணையவழி நகல். |
| பி.சா–ஆ.10 | – | பட்டா எண்.2115ல் ஹரிகிருஷ்ணன் பெயரில் உள்ள கணினி பட்டா இணையவழி நகல். |
| பி.சா–ஆ.11 | – | பட்டா எண்.2114ல் ராஜேஷ்வரி பெயரில் உள்ள கணினி பட்டா இணையவழி நகல். |
| பி.சா–ஆ.12 | 30.10.2021 | வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு. |
| பி.சா–ஆ.13 | 12.11.2021 | வாதி தனது வழக்கறிஞர் மூலம் கொடுத்த பதில் அறிவிப்பு. |
| பி.சா–ஆ.14 | – | வாதி கொடுத்த பதில் அறிவிப்பினை வாதியின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை. |
| பி.சா–ஆ.15 | – | வாதி கொடுத்த பதில அறிவிப்பினை 1ம் வாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை |
| பி.சா–ஆ.16 | 26.04.1977 | கிரைய பத்திரத்தின்இணையவழி நகல் |
| பி.சா–ஆ.17 | 09.03.2009 | அக்குவிடுதலை பத்திரத்தின் இணையவழி நகல். |

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.30 11:44:19 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு